18.06.2024

O.S.No.193/2019

வா.சா.1.திரு.செல்லப்பாண்டி த.பெ.பாண்டி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் தாவா சொத்தினை கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் 1998ம் ஆண்டு வாக்கில் இருந்தே எனக்கும், பிரதிவாதி தரப்பினருக்கும் சொத்து தகராறு இருந்தது என்றால் இல்லை. தாவா சொத்து குறித்து கடந்த 5 ஆண்டுகளாகத்தான் எனக்கும், பிரதிவாதி வகையறாவிற்கும் இடையே பிரச்சினை இருந்து வருகிறது. தாவா சொத்தினை இஎம்ஜி சௌந்திராஜன் என்பவர் அய்யனார் என்பவருக்கு கிரையமோ, பவர் பத்திரமோ எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, எழுதிக்கொடுத்துள்ளார். அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய பத்திரத்தின் அசலோ, அய்யனாருக்கு இஎம்ஜி சௌந்திராஜன் பவர் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் பவர் பத்திர்தின் அசல் பத்திரமோ என் கைவசமோ என்னைப்போன்று இந்த நீதிமன்றத்தில் வழகது தாக்கல் செயதுள்ள மற்ற வழக்காடிகளின் கைவசம் இல்லை என்றால் சரிதான், எங்கள் வசம் நகல் மட்டும் தான் உள்ளது. இஎம்ஜி சௌந்திராஜன் என்பவர் தாவாசொத்தில் கட்டுப்பட்டுள்ள சர்வே எண் அடங்கிய சொத்துக்களை பொறுத்து அய்யனாருக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், ஆகையால் தான் அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தின் அசலையும், அவர் பவர் பெற்றதாக சொல்லப்படும் பவர் பத்திரத்தின் அசலையும் நானோ, என்னைப் போன்று இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள வழக்காடிகளோ தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல.

2. அய்யனாரை சந்தித்து அவரது கிரைய பத்திர அசலையோ, பொது அதிகார பத்திரத்தின் அசலையோ காண்பிக்குமாறு கேட்டு அதை நான் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை, தாவா சொத்து சம்பந்தமாக கடந்த 5 ஆண்டுகளாகத்தான் பிரச்சினை என்பதால், அந்த ஆவணங்களின் அசலை நான் வாங்கி பார்க்கவில்லை. தாவா சொத்தில் கல் ஊன்றி வீட்டு மனையாக இருக்கும் புகைப்படம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் ஒருபோதும் சுவாதீனத்திலோ, அனுபவத்திலோ இருந்ததில்லை என்றாலும், வீட்டு மனையிடமாக கல் ஊன்றப்பட்டு இருந்ததாக சொல்வதால் அதை நிருபிக்கும் பொருட்டு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாவா சொத்து ஆரம்ப காலம் முதல் தற்போது வரை விளையாட்டு மைதானமாகத்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-7 ஆவணமான லே அவுட் எனது கிரைய பத்திரத்துடன் இணைந்து அதில் குறிப்பிட்டு பதிவு செய்யப்படவில்லை என்றாலும, மேற்படி லே அவுட்டினை நர் னதனியாக வா.சா.ஆ-7 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான், ஆகையால் வா.சா.ஆ-7 ஆவணம் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றாலும், இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல.

3. இஎம்ஜி சௌந்திராஜன் என்பவருக்கு 1 செண்ட் இடம் கேரளாவில் உள்ள பாறசாலை என்ற இடத்தில் இருந்ததாக நான், எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளதால் அந்த இடத்தினை

நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. தாவா சொத்தினை மோசடியாக அபகரிக்க வேண்டும என்ற நோக்கத்தில் அய்யனார் என்பவர் இஎம்ஜி சௌந்திராஜன் கையொப்பத்தினை மோசடியாக இட்டு ஆவணம் தயார் செய்து, கேரளாவில் உள்ள பாறசாலையில் பதிவு பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டுககு பாத்தியப்பட்டது என எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தினை கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சமயத்தில் தாவா சொத்து இதற்கு முன்பு கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ட்டுக்கு பாத்தியப்பட்டது என்ற சங்கதியை நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரையம் பெற வேண்டும் என்றால் நீதிமன்ற முன் அனுமதி தேவை என்றால் சரிதான்.

4. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் வா.சா.ஆ-8 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளை அடிப்படையாகக் கொண்டு அதில் சொல்லப்பட்டுள்ள டிரஸ்ட் சம்பந்தமான சங்கதிகளை எனது வழககில் நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற அனுமதி இல்லாமல் தான் டிரஸ்ட் சொத்தினை நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல, நீதிமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதி பெற்ற உத்தரவு நான் தாக்கல் செய்துளளேனா என்றால் இல்லை, தேவை என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நீதிமன்ற அனுமதி எதுவும் வாங்காமல் டிரஸ்ட்டுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரையம் வாங்கி விட்டு, தற்போது இந்த வழக்கிற்காக நீதிமன்றம் அனுமதி பெற்றுவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.169/2, சர்வே எண்.169/1 ஆகிய சொத்துக்களில் தான் பிரதிவாதிகள் பள்ளி, மைதானம், விடுதி ஆகியவை இயங்கி வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து தற்போது வரை பிரதிவாதிகளின் அனுபவத்தில் கோபாலகிருஷ்ண மேல்நிலை பள்ளியின் விளையாட்டு மைதானமாகவும், பள்ளி விடுதியாகவும், இருந்து வருகிற சங்கதி எனக்கு தெரியும் என்றாலும், இந்த வழக்கிற்காக அதை மறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும சரியல்ல.

5. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை புலதணிக்கை செய்தபோது நான் உடன் இருநதேனா என்றால் உடன் இருந்தேன். அதே போல் என்னுடன் சேர்ந்து இதே போல் வழககு தாக்கல் செய்ய மற்ற நபர்களும் இருநதார்கள் என்றால் சரிதான். அப்போது நீதிமன்ற ஆணையர் முன்னிலையில் சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகிய சொத்துக்கள் அளவீடு செய்யப்பட்டன என்றால் சரிதான். அவ்வாறு புல தணிக்கை செய்ததன் பேரில் அந்த சொத்துக்களில் விளையாட்டு மைதானமும், பள்ளி விடுதியும் இருப்பதாக நீதிமன்ற ஆணையர் தெரிவித்தார் என்றால் சரியல்ல. சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவற்றில் அடங்கிய சொத்துககளில் கோபாலகிருஷ்ண மேல்நிலைபள்ளி விளையாட்டு மைதானமும், பள்ளி விடுதியும் இருப்பதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அறிக்கையில் என்ன இருந்தது என்றால் எங்களுக்கு தெரியாது, அறிக்கை இருந்தது. புல தணிக்கை செய்தபோது என்னோடு வழககு தாக்கல் செய்த மற்ற நபர்களையும் சேர்த்து வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் அனைவரையும் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

6. சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவற்றில் அடங்கிய சொத்துக்கள் முறையாக அளவிடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த நில அளவையின் போது எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றாலும், நான் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றாலும் சரிதான். அறக்கட்டளை தொடர்பான தீர்மானத்தினை நான் பார்த்ததில்லை என்றால் சரியல்ல, நான் படித்து பார்த்தேன். அந்த அறக்கட்டளை தீர்மானத்தினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோபாலகிருஷ்ண கோன் அறக்கட்டளை நிறைவேற்றிய தீர்மானத்தினை நான் படித்து பார்த்ததாக சொல்வது இந்த வழககிற்காக சொல்லப்படும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கிரைய ஆவணத்தினை தவிர அதை அடிப்படையாக கொண்டு வேறு எந்த வருவாய் ஆவணங்களும் என் பெயரில் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருப்பதால்தான், நான் தாவா சொத்தில் எந்த காலத்திலும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

7. நான் பிராதில் சொல்லி உள்ள பிரதிவாதிகள் தொடர்பான வழக்குகளில் தாவா சொத்து குறிப்பிடப்படவில்லை என்று நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிகள் தொடர்பான வழக்குகளில் தாவா சொத்து குறிப்பிடப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையை நான் படித்து பார்க்கவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் கட்டுப்பட்டசர்வே எண்ணில் அடங்கிய சொத்துககளை அய்யனாருககு கிரையமோ, பவர் பத்திரமோ எழுதிக்கொடுக்கவில்லை என்றும், ஆகையால் அய்யனாரிடம் இருந்து கிரையம் பெற்றதாக சொல்லப்படும் எனக்கு, தாவா சொத்தில் எந்தவித உரிமையும், பாத்தியதையும் இல்லை என்றும், பிரதிவாதி ஆட்சேபணை செய்திருப்பதால் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கேட்காமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எந்த காலத்திலும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றாலும், பிரதிவாதிகள் பள்ளிகூடத்தின் மைதானமாக இருந்து தற்போது வரை அவர்கள் அனுபவத்தில் தான் இருநது வருகிறது என்றாலும், தாவா சொத்தினை மோசடியாக கைப்பற்றும் நோக்கத்தில் பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2018ம் ஆண்டு வரை தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்து வந்தது. நான் கிரையம் வாங்கியதாக சொல்லலப்படும் தேதி முதல் 2018ம் ஆண்டு வரை தாவா சொத்து எனது அனுபவத்தில் தான் இருந்தது என்பதனை காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. இந்த தாவாவினை 2019ம் ஆண்டு நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் அய்யனாரையோ, பள்ளி கல்வித்துறையையோ தரப்பினராக சேர்க்கவில்லைஎ ன்றால் சரிதான். அய்யனார் இறந்து போனார், ஆகையால் அவரை நான் சேர்க்கவில்லை. இந்த வழக்கிற்கு அவசியதரப்பபினரை சேர்க்கவில்லை என்பதால் இந்த வழககு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எதிரிடை பாத்தியம் ஏற்பட்டதாக நான் சொல்லி உள்ளதால் அந்த

சங்கதியும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லாத போது, பிரதிவாதிகளின் அனுபவத்தினை ஒப்புக்கொண்டு மோசடியாக இந்த வழககினை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பதால் இந்த வழதுககு சட்டப்படி நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல, தாவா சொத்து மதிப்பு செண்டுக்கு சுமார் 5 லட்சம் இருக்கும் என்றால் சரியல்ல, சுமார் 4 லட்சும் இருக்கும். தாவா சொத்து மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து முறையாக மதிப்பீடு செய்யாமலும், நிரந்தர உறுத்தக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பதாலும் இந்த வழககு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கோடு தொடர்புடைய அசல் வழக்கு எண்.156/2019 வழக்கின் வா.சா.ஆ-1 ஆக விசாரிக்கப்பட்ட பாண்டி ஆசாரி என்பவரது அளித்த சாட்சியத்தினை தெரிந்துகொண்டு இந்த வழக்கில் மிக சாதுர்யமாகவும், உண்மைக்கு புறம்பாகவும் சாட்டசியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.